பதிவெண்: எம். 7030.

குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 14-10-58 செவ்வாய் | இசை: 20

விடுதலை முழக்கம்

(அகவல்)

இசை: சாமா தாளம்: ஆதி

"நம்தமிழ் நாடே நம்தாய் நாடு!
நம்தாய் நாடு வெல்க வெல்க!
நம்தமிழ் நாடு வாழ்க வாழ்கவே"

இந்த முழக்கம் எழுப்புக நன்றே
வீடெலாம் விடுதலை முழக்கம் மேவுக
ஊரெலாம் விடுதலை முழக்கம் உயர்க!

காலையில் விடுதலை முழக்கம் காட்டுக
உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க
உறங்குமுன் விடுதலை முழக்கி உறங்குக!

அன்னைமார் விடுதலை முழக்குவா ராகுக
தந்தைமார் விடுதலை முழக்கம் தழுவுக
மக்கள்மார் விடுதலை முழக்கம் வளர்க்க!

அலுவல்முன் விடுதலை முழக்குவார் ஆகுக
தொழில்முன் விடுதலை முழக்கித் தொடங்குக
விற்பனை விடுதலை முழக்கித் தொடங்குக
படிக்குமுன் விடுதலை முழக்கிப் படிக்க!

அழகிய விடுதலை மணிக்கொடி
எழும்வரை பகைவர்க் கிடியென முழக்கவே!

புதுச்சேரி, தி. வ. ஆ ககூஅகூ புரட்டாசி உஅ

படக்கூத்தர் -வென்றாலும்!

எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு பழி வாங்கப்படுகின்றது. இதைப் படக்கூத்தர்கள் உணரவேண்டும்.

தமிழ்நாட்டு அரிசி கேரளத்திற்கு! இது நடுங்கத்தக்க கொடுமை! இல்லையா?

கேரளத்தைத் தொட்டுக்கொண்டு கடலில் விழும் ஒரே காரணத்தால் – அத் தண்ணீர் தமிழ் நாட்டுக்கு மறிக்கப்படக் கூடாது என்று தில்லி சொல்லுகிறது. தமிழ்நாட்டு அமைச்சரும் இதற்குத் தாளம் போடவேண்டும். உயிர்த் தொல்லை இது! இல்லையா?

இலங்கைத் தமிழர்கள், தமிழர்கள் ஆதலால் அவர்கள் மக்கள் நிலையை இழக்க வேண்டும் இது தமிழர்க்கு மானக்கேடு! இல்லையா?

இரும்பு இருக்கிறது தமிழ்நாட்டில்! எண்ணெய் இருக்கிறது தமிழ்நாட்டில்! தமிழ் நாட்டில் அவைகள் இருக்கின்றன என்ற ஒரே காரணத்தால் தில்லியின் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றன. இல்லையா?

இந்தி வந்தால் தமிழ் கெடும்! என்பது மிழர்களின் ஒன்றுபட்ட எச்சரிக்கை. இந்தியைப் புகுத்தித் தமிழைத் தொலைக்கத்தானே வேண்டும் - இது தில்லியின் மகிழ்ச்சிக்கூத்து! இல்லையா?

அழிந்துவரும் தமிழரை ஆதரிக்கும் வாயிலாகக் கலகக்காரராகிய பார்ப்பனரின் வாலை அறுக்கவேண்டும் என்பது தமிழரின் உயிர் போன்ற கொள்கை. நெய்வேலியைப் பார்! மற்றும் உள்ள நிறுவனங்களைப் பார்! சென்னையே உன்னைப் பார்ப்பானிடம் ஒப்புவித்துப் பழிவாங்குகின்றேன் என்கிறது தில்லி. இல்லையா?

திராவிட மொழி ஆராய்ச்சிக்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு குழுவாம். அது வடநாட்டுமொழி ஒன்றே வாழ வேண்டும் என்றுழைத்து வரும் சட்டர்சி இடத்திலும், தமிழ்நாட்டுக் கங்காணிகளாகிய தெ. பொ. மீ.– சேது ஆகிய இரு பிள்ளைகளிடத்திலும் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. தில்லி நோக்கப்படி, தமிழின் தொன்மையையும், தனிப் பெருமையையும் தலைகீழாக்கி வருகிறார்கள். இல்லையா?

எது தமிழரின் உயிர் நிலை? அதைக் கொல்லுவது தில்லியின் நோக்கம்! எது தமிழர்க்குப் பெருமை தரும் கட்டம்? அதை ஒழிப்பது தான் தில்லியின் திட்டம்! இல்லையா?

முனைத்த கட்டங்கள் அனைத்தையும் தொலைக்கத் திட்டம் கண்டு பிடித்த தில்லியானது ஒன்றை மறந்திருந்தது, அது தான், "தமிழ் நாட்டுப் படத்தொழில்"

வடநாட்டுப் படத் தொழில் இன்று தோற்ற குதிரை! தமிழ் நாட்டுப் படத் தொழில் இன்று வென்ற குதிரை மட்டுமல்ல இனியும் வட நாட்டாரால் வெல்ல முடியாத குதிரை! இல்லையா? தமிழ் நாட்டுப் படத் தொழில் வட நாட்டானின் நெஞ்சை உறுத்தியது என்றால் காரணம் இது தான்.

தமிழ்ப்படத் தொழிலைத் தொலைக்க வட நாட்டான் எண்ணியதில் வியப்பு ஒன்றுமில்லை ஆனால் தமிழ் நாட்டுப் படக்கூத்தர்களைக் கைபாலாகாதவர்கள் என்று அவர்கள் நினைத்ததுதான் வியப்புக்குரியது.

தில்லிக்காரன் கொண்ட இந்தத் துணிச்சலுக்குக் காரணம் என்ன? –தமிழ் நாட்டுப் படக் கூத்தர்கள் கண்ணீர்த் துளிகளின்

இடுப்பில் குழந்தை!

அன்னையின் கொஞ்சல்.

இசை: சிந்துபைரவி தாளம்: ஆதி.

இடுப்பிலே உன்னையெடுத் தேஏனே—நீ
இனிக்கின்ற தேன்குடந் தாஅனே!
அடுப்பிலே காய்ச்சிய பாலோ—என்
அருமைத் திருக்குறள் நூலோ
செடியில் பறித்தெடுத்த பூவோ—தமிழ்ச்
சிலப்பதி காரஇளங் கோவோ
குடிக்கின்ற இளநீர்க் காயோ—என்
குழந்தையாய் வந்தவனும் நீயோ

கொடுப்பாய் தமிழிசை மொண்டே—என்
கொட்டிக் குவித்தகற் கண்டே
கடலிலே கண்டெடுத்த சங்கே—பனங்
காட்டிலே கொண்டஇள நுங்கே
கொடிமுல்லை ஊதுகின்ற வண்டே—நீ
கொத்தாகக் கட்டியபூச் செண்டே
குடித்தனம் காக்கவந்த தங்கம்—என்
குழந்தையாய் வந்தஇளஞ் சிங்கம்!

கைப்பாவைகள் என்று நினைக்கும்படி அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ நடந்து கொண்டார்கள்.

அதனால் கண்ணீர்த்துளிகள் தற்காலம் குடித்தனம் பண்ணுவதற்குத் தமிழ்ப் படக் கூத்தர்தாம் காரணம் என்று தெரிந்தோ தெரியாமலோ தமிழ் நாட்டு அமைச்சர்கள் எண்ணி முடிவு கட்டியிருந்தார்கள். இடையில் புகுந்தான் தமிழரின் பகைவனான தில்லிக்காரன்.

தமிழ் நாட்டை நோக்கிக் கேட்டான் எப்படி? - என்று!

ஆம், தொலைக்கலாம்! என்றது சென்னை.

உடனே தில்லி அன்னை திடீரென்று பெற்றாள் கலையை ஒழிக்கும் கொலைக்காரப் பிள்ளையை!

படநாடா இறக்குமதிக் கட்டுப்பாடு தமிழ் நாட்டைக் கெடுக்கும் அளவு வடநாட்டைக் கெடுக்கவில்லை! இல்லையா?

இப்போது படக்கூத்தர் தொடங்கியிருக்கும் அறப்போர் மிக வன்மை வாய்ந்தது. அவர்கள் எவரெவர்களை எந்தமட்டும் எடுத்தாளுகின்றனர்? - அதுகூடச் சரிதான்.

வெற்றி உறுதி! ஆனால் படக்கூத்தர்களும், படத்தொழில் நுணுக்கரும், முதலாளிகளும், பட்டரைக்காரரும், தில்லியை நம்பக்கூடாது! நம்பக்கூடாது தில்லிக்கழுகை! நல்ல துப்பாக்கிக்காரனை அவர்கள் கையோடு வைத்திருக்கவேண்டும்

அந்தத் துப்பாக்கிக்காரன் பகைக்கு அஞ்சாதவனாக இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் அவன் மக்கள்மேல் அருளுள்ளம் கொண்டவனாக இருத்தல் வேண்டும். சட்ட சபைமுதலிய எந்தப்பதவிக்கும் ஆசைப்படாதவனாக இருத்தல்வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் (குறள்)

★ ★ ★

அண்ணுத்துரையா எனக்குப் பொற்கிழி அளித்தார்?

தீர்ப்பாளர், இந்தக் குயில் எந்தப் பணத்தினின்று தோற்றுவிக்கப்பட்டது? என்று கேட்டார்.

அதற்கு T. N. ராமன் சார்பில் வந்திருந்த வழக்கறிஞர்சொன்னுர்: இராமன்பணத்தினின்று என்று!

என் சார்பில் வந்திருந்த வழக்கறிஞர் அதை மறுத்து, பாரதிதாசனுக்கு அளிக்கப்பட்ட தொகையினின்று இந்தக்குயில் தோற்றுவிக்கப்பட்டது. என்று பதில் கூறினுர்.

தீர்ப்பாளர்: அப்படியாளுல் நிதி தண்டிய-செலவு செய்த கணக்குக் கொண்டு வாருங்கள் என்ருர்.

உடனே அதற்கு T. N. ராமனுடைய வழக்கறிஞர்: ஆம்! ஆம்! காட்டச் சொல்லுங்கள் கணக்கை! என்ருர். என் வழக்கறிஞர் உறுதியாகச் சொல்கிறேன் கணக்குக் காட்டுவேன் - என்ருர்.

அடுத்த ஆய்வு மன்றில் நான் கணக்கைக் காட்ட வேண்டும். அண்ணுத்துரைக்கு ஆள் அனுப்பினேன். இதோஅதோ என்ருர். அஞ்சல் எழுதினேன் இதோ அதோ! தஞ்சையில் நாடகத்தின்போது நேரிற்கேட்டேன் இதோ அதோ!

என் குயிலேப்பறிக்கவும் என்அச்சகத்தைப் பறிக்கவும் முன் எண்ணத்தோடு செய்யப்படும் இந்த வேலேகள் அனைத்தும் அண்ணுத்துரையுடையதே என்று தெரிந்தும் நான் விடாப்பிடியாக அண்ணுத்துரையைக் கேட்டுப்பார்த்தேன். ஏன் எனில், விழாக் குழுவில் உள்ளவர்களுககு அஞ்சி அண்ணுத்துரை. கணக்குகளே என்னிடம் கொடுக்கத்தானே வேண்டும்! ஆனுல் அவர் என்ன செய்தார் தெரியுமா? விழாக் குழுவினரை அழைத்து —

கணக்கைப் பாரதிதாசனிடம் கொடுப்போமாளுல் நாம் எல்லோரும் சிறைக்குப் போக வேண்டும் என்ருர்.

குழுவினர் நம்பினுர்கள்! ஏன்? அவர்களுக்குப் புரிகின்றது. வரவு வந்த பெருந்தொகை கொள்ளேயடிக்கப் பட்டிருக்கிறது.

கொள்ளேயடித்தக் குற்றத்தை நம் தலேயில் கட்டிவிடும் ஆற்றல் அண்ணுத்துரைக்கு உண்டு என்று குழுவினர் உறுதியாக நம்பினுர்கள்.

இன்று வரைக்கும் அண்ணுத்துரை வரவு செலவுக் கணக்கைக் கொடுக்கவேயில்லே!

என் வழக்கு என்ன ஆயிற்று - கெடு தள்ளிக் கொண்டே போகிறது. T. N. ராமனின் நிலே கீழ் நோக்கிக் கொண்டே போகின்றது. வழக்கைக் கைவிட்டு விடுவதாக என்னேக் கேட்டுக்கொண்டார். நானும் வழக்கைக் கைவிட்டுவிட்டேன். அதன் பயனுகக் குயில் என்னிடமே வந்துவிட்டது. அது சென்னேயிலேயே நடந்துகொண்டிருந்தது. அதன்பின் புதுவை வந்தது. அதன்பின் சென்னே அரசினர் அதற்குத் தடைபோட்டார்கள் நின்றது.

அந்தத் தடை நீங்கியது பின் இப்போது புதுவையில் தொடங்கப்பெற்று நடந்து வருகின்றது.

தோழர்கள் எனக்கு அனுப்பிய வினுக்களுக்கு — ஒன்று தவிர — விடை சொல்லிவிட்டேன் என்று எண்ணுகின்றேன்.

இன்னும் ஒன்றுக்குத்தான் பதில் சொல்லியாக வேண்டும்.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கஉ

ஐந்தாண்டுகட்குப் பின்

இடம்: பாண்டியநாடு, டி பச்சைக்கிளி யின் வீடு.

காலை: காலை.

உறுப்பினர்: பச்சைக்கிளி, அவள் கணவன், ஐந்து ஆண்டுடைய பொன்னன் என்ற பெயருள்ள மகன்.

காட்சியின் தலைப்பு:

இலந்தைக் கனி

நிலைமை: கணவன் தன் பணிமனைக்குச் செல்லுமுன், கருவுற்றிருக்கும் பச்சைக்கிளியுடன் பேசு கின்றான். மகன் பொன்னன் உடனிருக்கின்றான்.

கணவன்: பச்சை! இரண்டுயிர் உடையவள் நீ. என்ன வேண்டும்! ஆசைப் பட்டதைக் கேட்க வேண்டும். உள்ளத்தை மறைக்காதே. இரண்டாவது பிள்ளைக்குத் தாயாகப் போகின்றாய்-இன்னும் நாணத்தால் சாகின்றாய்.

முந்தா நாள் செந்தாழை வேண்டு மென்றாய். இந்தா என்று கொண்டு வந்து கொடுத்தேன். மகிழ்ந்தாய் அல்லவா? அது கண்டு நானும் மகிழ்ந்தேனில்லையா?

பச்சை: எனக்கு வெட்கமா இருக்கிறது. அத்தான்.

கணவன்: சொல்லுவதற்கா? நாம் கலக்கு முன் விலக்கமுடியாதது வெட்கம்; கலந்தபின்- இத்தனை ஆண்டுகளும் ஆனபின்?

பச்சை: இலந்தைக் கனி வேண்டும்.

கணவன்: இந்த ஆசை இயற்கையானது தான்! இலந்தைக் கனி புளிப்புக் கலந்த இனிப் புடையது. கருவுற்ற பெண்களின் நினைப்பைக் கவர்வது. நன்று! இலந்தைக் கனிதானே நன்று. இதுதானே கூடைகூடையாக.

பொன்னு: எனக்கும் அப்பா!

கணவன்: உனக்கில்லாமலா? போய் வரு கின்றேன் பச்சை. விழிப்போடிரு.

பச்சை: பொன்னன் பள்ளிக்குப் போக மாட்டேன் என்கிறானே! சொல்லிவிட்டுப் போனால் தானே!

கணவன்: தம்பி. பள்ளிக்குப் போக வேண்டும் தெரியுமா?

பொன்னு: இலந்தம்பழம்?

கணவன்: பள்ளிக்குப் போனால்தான்!

பொன்னு: இலந்தம்பழம் கொடுத்தால் தான்.

கணவன்: சிறுவர்களை வைத்துக்கொண்டு ஒன்றும் பேசக்கூடாது! தம்பி இலந்தம்பழம் கொண்டு வருகின்றேன் நீ பள்ளிக்குப் போய் வா! என்ன? நான் போய் வருகின்றேன்.

(போதல்)

ஒருபுறம்.

திண்ணைப் பள்ளி

நிலைமை: மாணவர்சிலர் ஒரு மாணவனைத் தூக்கிக் கொண்டு பள்ளியினுள் புகுகின்றார்கள். பையன் அழு கின்றான்.

ஆசிரியர்: (அழும் பையனைப் பிரம்பால் அடித்து) அழாதே! இப்படி உட்கார்ந்திரு.

முதியோர்: (பள்ளிக்கு அருகில் உட்கார்ந்து நிலைமையை உற்று நோக்கி) ஏன் ஆசிரியரே, நீரே

அந்தக் கேள்வி என்ன?

கருணாநிதி முதலியவர்கள் — கூட்டத்தில் பேசும்போது பாரதிதாசன் பாட்டுக்களைப் பாடு கின்றார்கள். அவ்வாறு பாடியபின், இது மாஜி கவிஞர் பாரதிதாசன் பாட்டு என்கின்றார்கள்.

இதுபற்றி உங்கள் கருத்து என்ன — என்பது.

இதற்கு அடுத்த குயிலில் பதில் தெரிவிக் கின்றேன்.

∞○∞

அவனை அடித்துவிட்டு அழாதே என்கிறீரே சரியா அது?

ஆசிரியர்: நாவையடக்கிக் கொண்டிரும் நரம்பறுந்த யாழ்போலவே! அடே பொன்னு! காலையில் எழுந்து காலைக் கடனை முடித்துக் கொண்டு இட்டதை உண்டு இரண்டாம் பேர் அறியாமல் பள்ளிக்கு வந்துவிட வேண்டியது தானே!

பொன்னு: எங்கம்மா பிள்ளைத்தாய்ச்சி!

ஆசிரியர்: இருந்தால்?

பொன்னு: இலந்தம்பழம் கேட்டாங்க.

ஆசிரியர்: யாரை? உன்னையா?

பொன்னு: எங்க அப்பாவை.

ஆசிரியர்: அதற்காக?

பொன்னு: அவுங்க வாங்கி வர்ரேண்ணுங்க

ஆசிரியர்: நீ எதற்காக

பொன்னு: ஒரு கூடை வாங்கி வர்ரேண்ணுங்க.

ஆசிரியர்: சொன்னால்?

பொன்னு: எனக்கும் குடுக்கறேண்ணுங்க.

ஆசிரியர்: கொடுக்கட்டுமே. நீ பள்ளிக்கு வருவதெற்கென்ன?

பொன்னு: அதை வாங்கித் தின்னுட்டு வர்லாமிண்ணு இருந்தேன்.

ஆசிரியர்: வரும்போது வாங்கியுண்பதா அதற்காகப் பள்ளிக்கும் வராமல் வீட்டிலேயே காத்திருப்பதா?

பொன்னு: இல்லாட்டி அல்லாத்தியும் அவுங்களே தின்னுட்டா நீங்க குடுப்பிங்களா?

முதியவர்: கொடுப்பார் தம்பி பிரப்பம்பழம் கொடுப்பார்!

ஆசிரியர்: ஐயா! ஒட்டைச் சட்டியாரே ஒன்றும் பேசாதிரும்!

ஏன் பொன்னு, நேற்றுச் சொல்லிக் கொடுத்த பாடம் நினைவிருக்கிறதா?

பொன்னு: இருக்கிறது.

ஆசிரியர்: சொல்லு.

பொன்னு: இலந்தம்பழம்!

முதியவர்: வேறென்ன?

ஆசிரியர்: உன் சுவடி எங்கே

பொன்னு: வீட்டில் இருக்கிறது போய் எடுத்து வரட்டுமா?

ஆசிரியர்: போக வேண்டாம்.

பொன்னு: நாக்கு வறண்டு போவுது தண்ணீர் குடிச்சுபுட்டு வரட்டுமா?

ஆசிரியர்: மெய்யாகவா?

பொன்னு: என் நாக்கைப் பாருங்க.

ஆசிரியர்: இங்கே தண்ணீர் கொண்டுவரச் சொல்லுகிறேன் குடி. ஆரடா அங்கே கண்ணப்பா இவனுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடு.

பொன்னு: யாருகிட்டேயும் தண்ணீர்குடிக்காதெண்ணுங்க எங்கம்மா.

ஆசிரியர்: இப்பொழுது நீ வீட்டுக்குப் போக வேண்டும். அதுதானே!

பொன்னு: அதாங்க

ஆசிரியர்: ஏன்?

முதியோர்: இலந்தம் பழம் வந்திருக்கும்

ஆசிரியர்: அப்படித்தானு?

பொன்னு: தாடிகாரர் சொன்னுர் இல்லிங்க

ஆசிரியர்: உன் நினைவு இங்கில்லை வீட்டுக்குப் போய் நடுப்பகல் உணவுண்டு வந்து விடு! என்ன?

பொன்னு: சரிங்க

ஆசிரியர்: நீ தனியாக வீட்டுக்குப் போவாயா?

முதியோர்: நான் அந்த வழியாகத்தான் போகிறேன். அவனை வீட்டில் விட்டுவிட்டுப் போகிறேன்.

(போதல். காட்சி முடிவு)

தே த ன்

—சித்தன்—

கவிஞர்சொலு முவமையெலாம் கவின்தே னேயாம்;
கைப்பிள்ளைக் கிடுமருந்தில் களிதேன் தம்பீ!
புவியரசர் மருந்துண்ணப் புகுந்த போது,
புற்றுத்தேன் நாடிநாற் படையே போகும்!
அவியுணவை அறியாத தமிழர், செவ்வேட்
கருத்தியதும் தேனுணவே! ஆயுள் முற்றும்.
செவியாரத் தேன்பெருமை செப்பக் கேட்பாய்:
சீர்த்தேனுக் குவமையெனில் தேனே யதாம்!

செவ்வேள்: முருகன்.

காதலியி னிதழ்சுவைத்துக் களிதேன் என்பாய்;
கான்முளையின் மழலையுன் றன் காதில் தேனும்;
மாதரிடும் அறுசுவையில் மனைத்தேன் காண்பாய்;
மன்றத்தே தமிழ்சுவைத்து மலைத்தேன் என்பாய்;
கோதகன்ற தமிழிசையைக் குளிர்தே னென்பாய்;
கொம்புத்தே னேசுவைமுக் கனிகள் என்பாய்;
ஓதரிய புகழீந்தாய் உயர்தே னுக்கே!
உண்மையினி லதனுயர்வை உணரக் கேளே!

கான்முளை — குழந்தை.

முயற்சியினில் தேனீப்போல் முயல்வா ருண்டோ?
முழுநேர ஊழியரின் முதல்வன் தேனீ!
அயர்வின்றி யோர்"கிராம்" தேன்சேர்க் கப்பல்
லாயிரமா யிரமலரை அணுகும் ஓர் ஈ!
உயர்மூலி பலவற்றின் உயிர்ச்சத்தே தேன்!
உண்டார்நூ றுண்டின்மேல் உயிர்வாழ்ந் துள்ளார்!
செயற்கரிய வள்ளல்கள் என்செய் தாரிச்
சிறுபுழுவின் கொடைநோக்கச் சிறுமை ஏற்றார்!

கிராம் — ஒரு சேரில் ஆயிரத்தில் ஒரு பங்கு
மூலி — மருந்துச் செடிகள்

பன்னூறு மலரில்தேன் பருகி, மக்கள்
பயன்காண ஈக்கள்தரும் பரிசீ தப்பா!
பொன்னூறு கோடிசெல வழித்த போதும்,
புதுத்தேனுக் கீடொன்றைப் புரியல் உண்டோ?
இன்தேனீ யொருகுடும்பம் கோடை யொன்றில்,
எடுக்குந்தேன் நூறுடனேம் பதுசேர் ஆகும்!
முன்னாளில் கிரேக்கர்களோ டெகிப்து நாட்டார்,
முச்சங்கத் தமிழரிதை முடிமேற் கொண்டார்!

குறிப்பு; *ஒரு தேனீ குடும்பம் 150 சேர் தேனை ஒரு கோடைக்காலத்தில் சேர்க்கின்றது.*

(தொடரும்)

பிழை திருத்தம்

சென்ற குயிலில் (30-9-58) ஆராவமுதம் 2 என்ற தலைப்பில் 2 ஆம் பாடலில் 6 வது வரி விட்டுப் போயிற்று. அது வருமாறு.

"பசுவளர்ப்போ பொதுத்தொண்டாம்; பாரில் இங்கே"

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

வித்தகம்

இது தூய தமிழ்ச்சொற்றொடர் இருசொற்களால் அமைந்தது: வித்து+அகம்.

வித்தகம் என்பது பழந்தமிழ் நூற்களில் பல்லிடத்தும் எடுத்தாளப் பட்டிருக்கின்றது.

> நத்தம்போற் கேடும், உளதாகும் சாக்காடும்
> வித்தகர்க்கு அல்லால் அரிது. *(திருக்குறள்)*

> வித்தகப் பெண்பிள்ளை நங்காய் *(ஔவையார்)*

முதலியவை காண்க.

வித்து எனில் முதன்மை; காரணம். அகம் எனில் மனம். எனவே வித்தகம் (வெற்றிக்குக்) காரணமாகிய மனம்; ஆற்றல்! அவ்வாற்றலும் தோல்வியடையாத ஆற்றல் ஆகும். மேற்படி குறளில் வரும் வித்தகர் என்பதற்குப் பரிமேலழகரும் சதுரப்பாடு உடையவர் என்று பொருள் கூறினர். சதுரப்பாடு,-ஆற்றல்.

வித்தகம் என்னும் இது, நாளடைவில், வித்துக்கும் வழங்கலாயிற்று. அதன் அருமை காட்ட உழவர்கள் வித்து என்று சொல்லை, வித்தகம் என்றே சொல்வதுண்டு. மணிமேகலையில் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை 227-ம் அடி.

"நெல்வித் தகத்துள் நெல்முளை தோற்றும்" என்பது.

வித்தகம் தமிழ்ச் சொற்றொடர் என்பதில் ஐயப்பாடு அடையக்காரணமே இல்லை யாகவும் தமிழ் மாணவர் நலம் கருதி நாம் இதற்கு விளக்கம் தர முன்வந்தோம், இது வடசொல் என்று ஒரு நண்பர் சொன்னதால்.

நல்ல மனைவி

என்,

வாழ்க்கைப்பயிர் செழிக்கவந்த
வான்மழை அவளே — இன்பத்
தேன்மழை அவளே

கீழ்க்கடல்மேல் கதிர்வருமுன் விழிமலர்ந்திடுவாள் — எனைத்
தொழு தெழுந் திடுவாள்

இல்வாழ்க்கைக் கேற்றகுணம்
செயல்கள் உடையவள்
செல்வவரு வாய்க்குத்தக்க
செலவு செய்பவள்

நல்லார்வணங்கும் கற்பைஉயி ரென்றுநினைப்பாள்
எல்லாம்பெற் றேனிவளை நான்மணந்ததனுல்

தன்னையும் தான்மணந்த
துணைவன் தன்னையும்
தன்னினத்துப் தமிழ்ப்பெருங்குடி
தனிப் பெருமையையும்

எந்நாளும்காப்பதிலே இம்மியும் தவருள்
பொன்னேட்டிற் புகழ்எழுதும் நன்னயமுடையாள்.

இலக்கியத்தில் தூது!

— சு. மா. இராமலிங்கன். —

பதினாறு வயது நிரம்பிய பாவை அவள். இளமையின் பொலிவு அவள் உடலிலே பொங்கி வழிந்தது. கட்டுடல் - கனிந்தமேனி! கயல்விழி- கண்கவர் வனப்புள்ள செவ்விதழ்! ஆம்; இத்தனையும் அமைந்த எழில்மங்கைதான் அவள்.

சோலையிலே ஆடிப்பாடித் திரிந்த அவள் சுந்தரன் ஒருவனைச் சந்தித்தாள். அவன் பார்த்தான் அவளும்பார்த்தாள். இருவர்கண்களும் மாறிமாறிப் பார்த்தன. இதயங்கள் தாமாகவே ஒன்றையொன்று இடத்தை மாற்றிக்கொண்டன. அவர்கள் சந்திப்பு, காதலாக மலர்ந்தது.

பிறர் அறியாவண்ணம் இரவிலே தலைவன் வருவான். தலைவியும் அவன் வருகைக்காக ஆவல் பொங்கக் காத்திருப்பாள். இளமையின் இன்ப நினைவுகளைப்பற்றியும் – எதிர்கால வாழ்வுபற்றியும் கதை கதையாகப் பேசுவர்; களிப்புக்கடலிலே மூழ்குவர். இரவு அவர்களுக்கு இன்பமாக இருக்கும் காலை மலர்வதுகூட அவர்களுக்குத் தெரியாது. காலைக்கதிரவன் அவர்கள் கண்களுக்குக் கசப்பாகத் தோன்றுவான்.

நாட்கள் நகர்ந்தன, தலைவன் பொருள்தேடும் பொருட்டு வெளியூர் சென்றுவிட்டான். தலைவன் பிரிவைத் தாங்காத தலைவி தவியாய்த் தவித்தாள் அவள் உள்ளம் சோர்ந்தது, உடல் தேய்ந்தது கைவளை கழன்றன கண்களில் கண்ணீர் கரை புரண்டன.

ஓர் இடத்திலே இருக்க நிலைகொள்ளவில்லை அவளுக்கு. இங்குமங்கும் ஓடுவாள். எங்குமே அவளால் அமைதியையும், ஆனந்தத்தையும் அடையமுடியவில்லை. சோலைக்குஓடுவாள், அங்கே தன்மணாளனோடு அனுபவித்தஇன்பத்தை எண்ணி ஏங்குவாள், அருவியின் பக்கத்திலே செல்வாள், தன் ஆளனோடு தெளிந்த நீரிலே ஆடித்திளைத்த ஆட்டத்தை எண்ணிக் கலங்குவாள்.

பிரிவாற்றுமை நாளுக்கு நாள் அவளை வருத்தியது. உள்ளத்தில் ஏற்பட்ட வேதனையைப்போக்க கடற்கரைப்பக்கம் சென்றுள் அழகிய கடற்கரையின் அண்மையிலேயுள்ள சோலையைப் பார்த்தாள். காதலன் நினைவு மீண்டும் வந்தது.

"கண்கவர் சோலையே! என் கவலையின் காரணத்தை அவரிடம் சொல்லுவாயா" என்றுள் உப்பங்கழியைப் பார்த்தாள் இந்தஉப்பங்கழியாவது உழலும் என் நெஞ்சுக்கு உறுதுணை செய்யுமா? என்று ஏங்கினுள். பூத்துப் புதுமணம் பரப்பிய புன்னை மரத்தைப் பார்த்தாள். மகரந்தப்பொடியை சுமந்து மஞ்சள் நிறத்துடன் காட்சியளித்தன மலர்கள், தென்றற் காற்றிலே அவைகள் தவழ்ந்தாடின அந்த இன்பக் காட்சியைக் கண்ட தலைவி, இந்த மரமாவது என் அன்பர்பால் சென்று என் அவல நிலையை எடுத்துரைக்காதா? என்று ஏங்கினுள்.

புதுமைப் பெண்

○ மு. தமிழரசு ○

பள்ளிக்கு நீசெல்வாய் பெண்ணே
பாடம் படிப்பாய் கண்ணே
புள்ளி மானைப் போல — நீ
துள்ளி ஆடு வாயே......

புதுமை காட்டும் பெண்ணாய் — இன்பம்
பொங்கும் அமுதக் கண்ணாய்
பதுமை யாதல் மாற்றி — கல்வி
பலது றையும் போற்றி......

அடிமை முறை தகர்த்து — நல்ல
அன்பு முறை புகுத்தி
மிடிமை தன்னைத் தவிர்த்து — நலம்
மீள வழியே வகுத்து......

சரி சமமாய் நின்று — கொடும்
சாதி முறை வென்று
உரிமை வழியே கண்டு — இந்த
உலகில் இன்பம் கொண்டு......

தந்தை தாயை வணங்கு — அவளே
தங்கமான அணங்கு
விந்தை மாத ராகி — கலை
விண்ணின் மதி ஆகி!

அவள் கண்ட காட்சிகள் யாவும் கருத்தைக் கவர்ந்தனவேயன்றி, கவலைக்குத் துணை செய்ய வில்லை. கவலை அதிகரிக்க அதிகரிக்க, கடற்கரைப் பக்கம் சென்றுகொண்டே இருந்தாள். அங்கே நண்டு ஒன்று சுறுசுறுப்பாக ஓடுவதைப் பார்த்தாள். அவள் உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கியது. உதடுகள் துடித்தன. ஓடித்திரியும் நண்டைக் கண்ணுற்ற தலைவிக்கு, அதனிடம் நம்பிக்கை ஏற்பட்டது நண்டைப்பார்த்து ''நீயாவது என் கணவரிடம் தூதுசென்று என் கவலையைக்கூறி கடிதில் திரும்ப வேண்டுமென்று உரை! உரைத்து என் துயர் நீக்கு'' என்ருள்.

''இங்கே நான் காணும் இக்கடற்கரைச் சோலையும் என் காதலனிடம் சென்று கடிந்துகூறி உணர்த்தாது, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இந்த உப்பங்கழியும் கூருது. வண்டுகள் ஒலிக்கும் வண்ண மலர்களையுடைய இப் புன்னையும் என் துயரத்தைப் புகலாது ஆகையால், நண்டே! நீதான் எனக்கு உதவவேண்டும் உன் ஒருதுணை அல்லால் உற்றதுணை வேறறியேன்? தவிக்கும் என் நிலைமையைத் தலைவருக்கு நீதான் சொல்லவேண்டும். ஆம்; உன்னையேதான் நான் நம்பியிருக்கிறேன். நண்டே! கள்ளிரவில் நாள்தோறும் உன்னுடன் களித்த நங்கை அவதிப்படுகிருள் என்று சொல்! உன் துன்பத்தைப்போக்கி, களவொழுக்கத்திலேஉனக்கு உதவிபுரிந்து, இன்பமளித்த ஒருத்தி உன்பிரிவால் துடிதுடிக்கிருள் என்று சொல்! நீ பிரிந்த பிரிவால் மனமுடைந்து வாடுகிருள், அவள் வாட்டத்தைப் போக்க விரைவில் போ! என்று நீதான் கூற வேண்டும்'' என்று சொன்னுள்.

''கானலும் கழிந்தது; கழியும் கூருது,
தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது;
ஒருநின் அல்லது பிறிதுயாதும் இலனே,
...துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ!...
...நள்ளென் யாமத்து!
நின்உறு விழுமம் களைந்தோள்
தன்உறு விழுமம் நீந்துமோ எனவே''

—அகநானூறு. 170

எவர் பெரியார்?

புதுவை, வ. பொன்னம்பலம்

தன்னலங்கருதா துழைப்பவர் பெரியார்
தரணி ஏற்கும் பெரியார்
சொன்னசொல்தவரு திருப்பவர் பெரியார்
சூதற்ருேர் பெரியார்.

மக்கள்நலத்தில் நாட்டங் கொண்டே
வேலைசெய்வோர் பெரியார்
தக்கவழிகளை மக்கள் உணரவே
தந்திடுவார் பெரியார்

போராட்டத்தில் முன்நான் என்று
புறப்படுவோர் பெரியார்
திரர்பலர் தோன்றச் செய்யும்
திறமையுங்கொண்டோர் பெரியார்

மக்கள்யாவரும் சமமென எண்ணும்
மனமுடையோர் பெரியார்
எக்காலத்தும் இன்னலைக் கண்டே
இடையாதவர் பெரியார்.

கொள்கை யொன்றே குறிக்கோளாகக்
கொண்டவரே பெரியார்
கள்ளங் கபடு குணமில்லாத
கருத்துடையோர் பெரியார்.

பட்டம்பதவி பொருள் வெறுப்பதிலே
பாருக்கோர் பெரியார்
திட்டம் தீட்டும் திறமுடையோரே
செகம்போற்றும் பெரியார்.

அடிமை ஆட்சியை விரும்பிடாதவர்
அறிவுடையார் பெரியார்
கடுஞ்சிறை தனையும் முகமலர்ந்தேற்றுக்
கடமைசெய்வோர் பெரியார்.

பகுத்தறிவுகொண்டு பாருங்கள் எனவே
பகர்ந்திடுவோர் பெரியார்
புகையும் புகமுடி யாதஇடமெலாம்
புகுந்திடுவார் பெரியார்.

நிலையாக மாந்தர் உள்ளத்திலெல்லாம்
நிற்பவரே பெரியார்
மலைதலைமேலே விழவந்திட்டபோதிலும்
மலைக்காதவர் பெரியார்.

அஞ்சாநெஞ்சமும் ஆண்மையும் வீரமும்
அடைந்தவரே பெரியார்
துஞ்சாதுழைக்கும் தோள்வலிமை கொண்ட
துணைவர்நம் பெரியார். ★

இலக்கணம் இதுதானோ?

சென்னை, சுந்தரவடிவேலன்

சோழ நாட்டின்கண் வாழும் அத்தனை பெண்களும் ஒருவனையே காதலிக்கின்றனர்! ஏன்–அவன் அழகுக்கோர் பிறப்பிடமாம்! பரந்த மார்பினனும்! வெற்றிக்கோர் இலக்கணமாம்! இப்படியெல்லாம் சொல்கிறார்கள் அந்நாட்டுப் பெண்கள்! அவன் யார்? அவன்தான் சோழநாட்டின் மன்னன்!

அந்நாட்டுப் பெருவீதியில் வாழ்கிறாள் ஒரு நங்கை! அவள் பெயரோ செல்வி! ஆம் - செல்வமுடையாள்! பருவமடைந்தவள்.

ஒரு நாள்... சோழன் நகரைச் சுற்றிப் பார்க்க வருகிறான். பெருவீதியாக மன்னன் வரும் பொழுது செல்வியும் தன் இல்லத்து வாயிலிலே வந்து நின்று விட்டாள்!

மாடமாளிகைகளைப் பார்த்த வண்ணம் வந்த மன்னனின் பார்வை இந்த மாடப்புறாவின் மீது விழுந்தது! அவ்வளவுதான்! செல்வியும் மன்னனைப் பார்த்து விட்டாள்! நாணத்தால் ஓடி விட்டாள் வீட்டிற்குள்!

அன்று இரவு! படுக்கையில் படுத்த செல்விக்கு உறக்கமே வரவில்லை! எழுந்து உட்கார்ந்து சோழனைப் பற்றி எண்ணுகிறாள்! உண்மையிலேயே சோழன் நம்மை காதலிக்கிறானா? இல்லையெனில் அவனுடைய பார்வையில் அவ்வளவு அன்பு எப்படி கலந்திருக்கும்? ஆகா! அவனை மட்டும் நாம் மணந்தால்...! என்று நினைத்த வண்ணமே படுக்கிறாள்! அவளுடைய மனமோ அமைதி பெறவில்லை! மறுபடியும் எழுந்து சன்னலருகே நின்று வானத்தைப் பார்க்கிறாள். வட்டவடிவமான சந்திரன் அவள் கண்களுக்குச் சோழனின் திருவுருவமாக காட்சியளித்தது! சந்திரனுக்குச் சற்று தூரத்திலே இருக்கும் நட்சத்திரத்தைப் பார்த்த அவள் தானே அங்கு இருப்பது போல் உணர்கிறாள்! சே! இது என்ன கனவு என்று தன்னை நொந்தவாறே திரும்புகிறாள்! திரும்பிய அவள் கண்களுக்கு எதிரே இருந்தஓவியம் சுட்டியெனக்காட்சியளித்தது! ஆம்! அந்த ஓவியத்தில் காதலனும், காதலியும் குன்றின் மீதமர்ந்து பேசுகின்ற காட்சி தீட்டப்பட்டிருந்தது! செல்வி கண்களை மூடியவாறே படுக்கையில் போய்ப் படுத்தாள்! சிறிது நேரம் அமைதி! மறுபடியும் மனப் போராட்டம்! படுக்கையிலேயே புரண்டு, புரண்டு படுத்தாள்! திடீரென்று வலது கையிலிருந்த வளையல்கள் ஒடிந்து கீழே விழுந்தன! உணர்ச்சி வசத்திலிருந்த செல்வி இதையறியாள்!

பொழுது புலர்ந்தது! செல்வி தன்கைகளில் வளையல்கள் இல்லாததைக் காண்கிறாள்! உடனே ஒரு கனவு! "இரவு நம்வீட்டிற்கு சோழன் வந்திருக்கிறான்! கையைப் பிடித்திருக்கிறான்! வளையல்களைக் கழற்றிக்கொண்டு போயிருக்கிறான்!" என்று எண்ணித் தன் தோழியை அழைத்து,

"தோழியே! சோழனின் போர் யானைகளைப் பார்த்திருக்கிறாயா? அவை வெளியிலேவருகின்றன வென்றால் அனைவரும் தூரவிலகி நில்லுங்கள் எனப் பறை சாற்றுகின்றார்கள்! பிறகுதான் யானைகளும் பவனி வருகின்றன! அத்தகைய மதயானைகளையும், மார்பிலே அசைகின்ற அழகுமிகு மாலையினையும் பெற்றுள்ள சோழன் நீதிக்கு மாறாக எந்தச் செயலும் செய்யமாட்டான் என்று சொல்லுகிறார்களே! இது உண்மைதானா தோழி? நீசொல்லேன்! சோழன் சகலவிதமான குடிகளுக்கும் நீதிசெலுத்துகிறான் என்று சொல்கிறார்களே! என் உடல் நலனை அழித்துக் கைவளையல்களைக் கவர்ந்து சென்றானே!

கொட்டு முரசே கொட்டு!

— குந்தக்கல் குயில் —

கொட்டுக கொட்டுக கொட்டுக முரசே
கொட்டுக கொள்கை முழங்கி–எங்கும்
தட்டுக தட்டுக தட்டுக முரசைத்
தமிழரின் பகையினை உழக்கி!
(கொட்டுக)

சாதிகள் மோதிடச் சமயங்கள் வாதிடத்
தீதுகள் சேர்ந்ததைச் சாடி–கொடும்
சூதினைப் பொய்மையைச் சுயநலத் தன்மையை
சுடலையி விட்டு மண்மூடி!
(கொட்டுக)

நாட்டினிற் பெண்களை நாயினும் கிழாய்
நடத்திடுங் கேட்டினை யோட்டிச்–சுவைக்
கூட்டமு தாகும் காதலி லாண்பெண்
குலவிடுங் குறள்நெறி காட்டி!
(கொட்டுக)

பண்டைத் தமிழர் வாழ்வும் வளனும்
பைந்தமிழ் மேன்யும் நாட்டி–நம்
கண்டைநகர்த் தமிழ் ஒன்றுதான் நம்மைக்
காப்பது எனுமறி வூட்டி!
(கொட்டுக)

அவன் அரசன் தானா? அவன் செலுத்துகின்ற செங்கோன்மையின் அழகுதனை என் கைவளைகள் எடுத்துச் சொல்லாவோ?'' என்று தன் உள்ளக் கருத்துக்களை ஒளியாது கூறினாள்!

இதைக் கேட்ட தோழி சிரித்துக் கொண்டே, "உனக்கென்ன காதற்பைத்தியம் முற்றிவிட்டதா? உன் கைகளில் இருக்கும் வளையல்களைத்தானா சோழன் கழற்றிக்கொண்டு போய் விடுவான்? அவனுக்கென்ன செல்வம் இல்லையா? — எங்காவது கழற்றி வைத்திருப்பாய். தேடிப்பார் செல்வி'' என்று சொல்ல "ஏண்டிதோழி! நான் உண்மைக்கு மாறாகவா உன்னிடம் சொல்கிறேன்! நீதான் தேடிப் பாரேன்!'' என்றாள் செல்வி! உடனே இருவரும் இல்லத்துள் தேடிப்பார்க்க, கட்டிலின்கீழே இருந்த ஒடிந்த வளையல்கள் தோழியின் கண்களுக்குக் காட்சியளித்தன! தோழி அவற்றை எடுத்துச் செல்விக்குக் காட்டுகிறாள்! அதைக் கண்ட செல்வி நாணத்தால் தலை குனிந்து ஓடுகிறாள்..! ஓடுகிறாள்...! காதற்பாதையிலே! ஏன்? சோழனை அடைய மாட்டோமா? என்கிற ஒரே நம்பிக்கையோடு!

காதலின் இலக்கணம் இதுதானோ? என்று, அன்று கேட்ட தோழியின் கேள்விக்கு செல்வியால் இன்று வரை பதில் சொல்ல முடியவில்லை!

அறைபறை யானை அலங்குதார்க் கிள்ளி
முறைசெயும் என்பரால் தோழி—இறையிருந்த
அங்கோல் அணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செல்கின்ற வாறு.

— முத்தொள்ளாயிரம்.

குயிலுக்கு...

பின் கண்ட ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

செங்கற்பட்டு.	மதுராந்தகம்.
தாம்பரம்.	செஞ்சி.
விழுப்புரம்.	பண்ணுருட்டி.
திருக்கோவிலூர்.	கோவில்பட்டி.
காரைக்குடி,	குடியாத்தம்.
தென்காசி,	விருதுநகர்,
ஈரோடு,	வலங்கைமான்.
நாகப்பட்டணம்.	அரியலூர்.

கல்லா கடவுள்?

○ வே. மணிவண்ணன் ○

கோவிலுக்குப் போவதிலே பயனொன்று மில்லை
கடவுளெனக் கூறுவார் சாமியெனும் கல்லை
மாவிளக்குச் செய்துவைத்து வணங்குவது மடமை
மனதில் கொண்டு வணங்குவதே கடமை

பூசாரி ஏமாற்றுவான் பொய்யுரைத் துன்னை
பூச்சாண்டி காட்டி வந்தான் முன்னை
ஆசாமி தவிர வேறொன்றும் காணாய்
சிலைவைத்து வணங்குவது போகுமே வீணாய்

எல்லோரும் வணங்குவது கற்சிலை ஒன்றே
என்பதை நினைத்து நீதிருந்துவாய் நன்றே
கல்லாராய் இருந்தாலும் கற்பனைக் கிடமுண்டு
இதை சிந்திக்காவிடில் நீயோ ஒருமண்டு.

>o<

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து) காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு	ரூ. 100
அரைப்பக்கத்திற்கு	ரூ. 50
கால் பக்கத்திற்கு	ரூ. 30

★

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி

வளனும் நலனும் சுரந்து, எழில் தவழ்ந்து இன்பம்நல்கிய உயர்தனிச் செம்மொழிகள் உலகில் ஐந்து. அவற்றுள் முந்துபுகழ் நந்தம் தமிழ்மொழி முதற்கண் வைத்து எண்ணி மகிழும் பேறு பெற்றதாம்.

நறைபழுத்துச் சுவையொழுகும் துறைத்தீந் தமிழை, அகம், புறம் எனப்பிரித்து, முறையே காதலைப்பற்றியும் தறுகண்மையைப் பற்றியும் விதந்தோதி, உண்டு தண்டாப் பெருவளம் உடையதாக, கற்று அமையாத கரையில் ஆழியாக அவற்றுள் நுழைந்து நுனித்து ஆயும்பொழுது நுண்மை மிகுந்து கனிந்து தோன்றும் கவினுடைக் காட்சி, ஒரு பொருளைத் திரைப்படத்தில் தெளிவுறக் காணுதல் போலக் கண்டு தண்டாக் கட்கின்பம் பயப்பதாய், நோக்கு விளங்கி, நுவலறிய நுண் பொருளை ஒண் பொருளாய்க் கொண்டு, உயர்ந்தோங்கி, ஒளிர்வு பெற்றுத் தளிர்த்துத் துளிர்த்து மிளிர்வதைக் காணலாம்.

அகம் எனப் பெயரிய இக் காதற் பெருந்துறையும், களவு, கற்பு என்னும் இருபாற்று.

எழில் நலங்கனிந்த இன் தமிழ்ப் பாவை ஒருத்தியை, ஏறுபோல் பீடுநடை கொண்டு வீறு பெற்றுத் திகழும் கட்டழகன் ஒருவன், இயல்பாகச் சந்தித்த அளவில் கண்ணோடு கண் இணைநோக்கு ஒன்றி, இணைந்தெழுந்து நின்று காதல் நலம் பேசக் கூசுமுக நாணமொடு கோணி எழில் விச, அக் கோதை நல்லாள் குனிந்து நிலமகளை நோக்க, அது கண்டு இவனிடத்தில் ஒரு முறுவல் அரும்ப, ஆரம்பமாகிறது அவர்களது அன்பின் வழி முகிழ்த்த காதற் பெருந்துறையாம் தமிழ் ஒழுக்கம். இதுவே பின்னர் களவாகிக் கற்பாகும்.

நான் இவ்வாறு கூறுவது நல்லோர் கருத்துக்கு அப்பால் எட்டிநின்று கட்டியுரைத்துக் கூறும் பொய்யுரையுமன்று; புனைபொருளும் அன்று. பொய்யில் புலவனின் பொருளுரை. "களவின் வழித்து கற்பு" என்பது களவியல் நூற்பா.

உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின் ஒண் பொருளாம். இக்களவொழுக்கத்தைப் பொருந்தாதனவும் இயல்பற்றதுமான ஆரிய மணம் எட்டனுள் ஒன்றாகிய கந்தருவ மணத்திற்கு ஒப்பிட்டுக் கூறுவர்; ஆரியமத மேலோங்கிய சில பெரிய மனிதர்கள்!

இக் கூற்றுக்கு அப் பெருமக்கள் ஆதரவுதேடத் தொல்காப்பியக் களவியல் முதற் சூத்திரத்தையும், இறையனார் அகப்பொருள் முதற் சூத்திரத்தையும் தூக்கி மூண்டெழுந்த சினத்துடனும், முனிந்து நின்று வெகுண்டெழுந்த வெய்துயிர்ப்புடனும், விரைந்தெழுந்து பொருதவருவர். அவர்கட்கு நான் கூறுவதெல்லாம், "பொறுமை கடலினும் பெரிது, கூறுவன கண்டு ஆறுதல் உறுக" என்பதே.

களவெனப் படுவது,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பு"
"அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்" என்பது

முறையே, தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் சூத்திரங்களாகும்.

முதற் சூத்திரத்திற்குக் "களவு மணம் ஆரிய மன்றல் எட்டனுள் துறையமை நல்யாழ்த் துணையோராகிய காந்தருவரது மணத்தின் இயல்பு" என்பது பொருள்.

இரண்டாம் சூத்திரத்திற்கு "களவு மணம் ஆரிய மன்றல் எட்டனுள் காந்தருவ வழக்கம் என்று கற்றுத்துறைபோய் வல்லோர் கூறும் கூற்று" என்பது பொருள்.

ஆரிய மன்றல் எட்டு யாவையோ எனின், அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரியம், தெய்வம் காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம், என்பன. இம் மணத்தைப்பற்றி, நாவலர் கணக்காயர், சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆய்வுரையை எண்ணுக.

"பொருந்தாதனவும், செயற்கையும் ஆகிய, ஆரியர் வழக்குகளையும், முறைமைகளையும், தமிழரின் காதல்பற்றிய வழக்குகள், குறிக்கோள்களோடும், இணக்கி வேறுபாடு அழித்து ஒன்றுக்கச் சில பிராமண பிராமணீய, இலக்கண நூலாசிரியர்கள், மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் விளக்க வேண்டா வெளிப்படையாய் உள்ளன, எண் வகைப்பட்ட ஆரியர் மண முறைகளுள், பெரும் பான்மைய மணமெனும்பெயர்க்கே பொருந்தாதன. பைசாச ராக்ஷஸக் கூட்டங்களை மணமெனக் கூறுவது மெய்ம்மையைவும் மொழியிற் பழிப்புரையும் ஆகும்.

போற்றி யுரைக்கப்படும் கந்தருவந்தானும் நிலைத்த மணம் அன்று. ஓர் ஆண்மகனும் பெண் மகளும் ஒருகால் தம்முள் தலைப்பெய்தலையே குறிப்பதாகும். அவர் உறவு நிலை பெறல் வேண்டும் என்னும் நினைப்புத்தானும் அங்கு இல்லை. இவ்வோர் காலைக் காதல் வெளிப்பாட்டைத் தமிழர் களவு முறையாகிய ''கிழத்திமாட் டுயிர்க்காதல்'' முறைக்கு ஒப்பிட்டுரைப்பது பெருங்குற்றமே யாதலின் அங்ஙனம் கருதிக்கூறுங் கூற்றுக்களை விலக்கல் வேண்டும். உண்மையில் ஆரியர் மண முறைகளில் காதல் முதற்பொருளாக விதிக்கப்படவே இல்லை''

(பழந்தமிழ்நாடு பக்கம் 137–138)

கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிக்கும் வளஞ்செறிந்த குற்றால மலைச்சாரலில் சுரந்து, பெருக, ஊறி, இழிந்து வரும் அருவியில் ஆடச்செல்வோர் தலைக்கு எண்ணெய் இட்டுக் குளிக்க அருகிருக்கும் கடையில் சந்தனாதித் தைலம் வாங்கிச்சென்று குளிக்கிறார். அந்த எண்ணெய் கூட்டுவன அளவுடன் கூட்டி, சேர்ப்பன முறையறிந்து சேர்த்து உருவாக்கிய எண்ணெய் எனக் கொள்வோம்.

இது நாட்டு மக்களிடை நன்மதிப்புப் பெற்றுப் போற்றிப் புகழ்ந்து உயர்ந்தேத்த நிற்பதைக் கண்ட அயலவன், காழ்ப்புற்று, அழுக்காறு மீக்கூர்ந்து ஏறத்தாழ 'அதே இது' என்று கூறும் அளவுக்கு ஒரு போலிப்பொருளை உருவாக்கி, உலகோரிடை உலவ விடுகிறான்.

இதைக் கண்ணுற்ற உண்மைத்தயாரிப்பாளன் மக்களை நோக்கிக் ''கடந்த இத்தனை ஆண்டுகளாக யாங்கள் அரும்பாடுபட்டு முயன்று உருவாக்கி மக்களிடை மதிப்புப்பெற்று செல்வாக்குற்ற நிலையில் போலி ஒருவன் தோன்றி மது போன்றதே ஒன்றுசெய்து அதை மக்களிடை பரப்பி வருகிறான் ஆகவே எச்சரிக்கையாக விழிப்புடன் பார்த்து வாங்குங்கள்'' என்று கூறித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதை நாம் காண்கின்றோம்.

என்னை ஏதாவது ஒருபொருளுக்கு விளம்பர கர்த்தா என எண்ணி விடாதீர்கள். இந்த எடுத்துக் காட்டை மையமாகக் கொண்டுதான் தமிழரின் தொல் பழம்பெரும் மணமாகிய களவு மணத்தை ஆய்தல் வேண்டும்.

பழந் தமிழகத்தில் யாண்டும் களவு மணம் பெருகி மலிந்து நின்ற பொழுது, அதை மேலும் ஓம்பிப்பேணி. உலகிடை வளர்த்தனர். இம் மணம் நல்லது. சிறந்தது என்று கண்ட வடவர், நம் களவு மணத்திற்குப்போலியாக, கந்தருவம்என்றஒன்றைக் கூறி, அதை மக்களிடையே பரப்பினர். பன்னெடுங் காலமாகப் பேணிப் போற்றிப் பாதுகாத்துவந்த தமிழர் தம் சிறந்தநெறியை அப்படியே காப்பி அடித்துத் தங்களது மணமாக்கி மக்கள்முன் வைத்தனர்.

இது கண்ட முதுபெரும் பழம் புலவர்கள் நம் களவு மணத்தின் தன்மை கூறும்பொழுது, அந்தப் போலியையும் உடன்கூறி அதனுள் நம்மை நுழைய வொட்டாது தடுத்துப் பின்னர் களவு மணத்தின் தன்மையை யாண்டும் நீண்டு பெருக்கி, நெடிது வளர்த்து, சிறப்பினைச் சோம்பாது செப்பிச் சென்றனர்.

களவு மணம் எனக்கூறின உடனே, அதாவது அதே சூத்திரத்தினுள்ளே அடுத்த அடியில் கந்தருவத்தை விரைந்து கூறுதல் எற்றுக்கெனின் ''போலி ஒன்று கழுகுக் கண்கொண்டு, காத்து அமர்ந்திருக்கிறது. விழிப்புடனிரு ஏமாறாதே'' என்பதைக் காட்டுமுகத்தான் களவு கூறியவுடன் கந்தருவத்தைக் கூறினார் என்க.

ஆகவே தொல்காப்பியக் களவியல் முதற் சூத்திரமும், இறையனார் அகப்பொருள் முதற் சூத்திரமும் ''போலியைக் கண்டு ஏமாறாதீர்கள்'' என்னும் எச்சரிக்கைச் சூத்திரங்கள் என்று துணிக.

எவ்வாறு உண்மைத் தயாரிப்பாளன் போலித் தயாரிப்பாளனின் செயல்கண்டு வெறுப்பும் சினமும் கொண்டு வேறு படுத்தி மக்களை விழிக்க வைக்கிறானோ, அதுபோன்று இச் சூத்திரங்களும், ஆரியரின் போலிச்செயலைக் காட்டி வேறுபாட்டைச் சுட்டிச் செல்லும் சூத்திரங்கள் என்று கொள்க,

இனி, ''ஊர் எனப்படுவது உறையூர்'' என்பதன்கண் பிற ஊர்களின் உண்மைசுட்டி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறந்தது என்று கூறினாற் போலவும் ''தண்ணீரும் காவிரியே'' என்ற இடத்துப் பிற நீரையெல்லாம் கூறி அவற்றுளெல்லாம் சிறந்தது காவிரி நீர் என்று கூறினாற் போலவும், ''தார்வேந்தன் சோழனே'' என்ற இடத்துப் பிற வேந்தர்களையெல்லாம் கூறி அவர்களை எல்லாம்விட சோழன்தான் வேந்தன் என்று கூறினாற் போலவும், பிற மணங்களை (காந்தருவம் போன்றவை) எல்லாம் சுட்டி அதுனுள் எல்லாம் இது (களவு) சிறந்தது என்பதைக் காட்டத்தான் களவு கூறிப் பின் கந்தருவத்தைச் சுட்டினர் என்க,

எனவே இதுகாறும் கண்டவற்றால் தமிழ்க் களவு மணம் சிறந்தது, செம்மையது, சீர்மையது, வடவர் மணத்துடன் இதை ஒப்பேகூறுதல் ஆகாது தனித்தன்மை பெற்று உயர்வுற்றுத் திகழ்வது எனக் கண்டோம்.

எழுது தம்பீ!

≠ நெற்குப்பை, பனி. சண்முகம் ≠

எழுத்தாளன் யானென்றே ஏட்டைக் கையில்
எடுத்திட்டாய் எழுதுகோல் ஏந்தி யுள்ளாய்
எழுத்தாளும் மன்னவனுய் உலவு தற்கே
என்னதிறன் உண்டுனக்கே? எண்ணு தம்பி!
பழுத்திருக்கும் கனியல்ல எழுத்துக் கோவை
பறித்துண்ணும் நிலையன்று எழுத்தின் ஆட்சி
அழுத்தமிக வேண்டுமடா! ஆர்வம் வேண்டும்!
அஞ்சாமற் கருத்துரைக்கும் நெஞ்சம் வேண்டும்!

கனிபெறவே மரமிருக்க வேண்டும் நண்பா!
கைம்முதலே இல்லையெனில் வணிகம் ஏது?
நனிமழலை, தாயின்றேல் இல்லை உன்றன்
நன்மொழியே இல்லையெனில் எழுதல் ஏது?
அனையான தமிழிருக்க, அதை யழிக்க
அம்மாமிச் சொற்களிங்கு புகுதல் பாராய்
பனியகற்றி மலர்விக்கும் பரிதி யேபோல்
பாழ்ச்சொற்கள் எழுதாதே! துரத்தி ஓட்டு.

வீரத்தை நன்னெறியை எழுத வேண்டும்
வேண்டுமடா காதலுக்கே விளக்கம் நெஞ்சில்
ஈரமிலார் இழிநிலையை இடித்து ரைத்தே
இதயமிலார் தமையும்நெறிப் படுத்த வேண்டும்.
நீரகத்தே கொண்டுள்ள நிறைகு ணம்போல்
நின்கருத்தைச் சமுதாயம் விழைதல் வேண்டும்.
பாரகத்தே அறியாமை இருள கற்றப்
பாடுபடு வாய்தம்பீ! எழுது நன்றே!

தமிழ்த் தாயின் துயர் பாரீர்!

★ கோம்பை. தென்னவன் ★

அன்னையைப் பாரீர்! அவலம் பாரீர்!
அந்தோ இந்தி வெறியர் பாரீர்!
என்றுதான் ஓயும் அன்னையின் ஓலம்!
எத்தரின் சூழ்ச்சி எல்லையைக் காணீர்!
முன்னைய நாள்முதல் அன்னைக்(கு) இன்னல்;
முளைத்துக் கொண்டே இருத்தல் நன்றோ?
அன்னிய மொழியின் ஆட்சியை, நாடே
அடைந்து, தமிழைச் சூழ்ந்தது கேடு.

கன்னல் நிகர்நம் அன்னையைச் சூதாய்க்
கட்டினர் அடிமைத் தளையால் தியர்.
அன்னையை வடவன் பிணித்தான் ஏய்த்தே;
அன்னையின் முன்னர் வேள்வியில் பார்ப்பான்
அன்னவன் வேள்வியில் தூவுதல் காண்பாய்
ஆரிய மொழியாம் அதுவோ - நச்சாம்!
அன்னையின் மூக்கில் அப்புகை ஏற,
அலரும் தீந்தமிழ்த் தாயினைப் பாரீர்!

இந்நிலை கண்டு நொந்திடும் போழ்து
இன்னல் வடக்கன் ஏவுதல் ஏற்றே
இந்தியாம் தீய நச்சுக் கன்னி
இளித்துத் தளுக்கிப் புகுதல் காணீர்!
செந்தமிழ் மக்கள் இந்தியின் நட்பால்
செந்தமிழ்த் தாயைத் துறந்திடு வாரோ?
நந்தமிழ்ச் சேயரே அன்னையைக் காப்போம்
நம்மவர் கொண்ட மயக்கம் தீர்ப்போம்!

இனி, பத்துப்பாட்டுள் ஒன்ருகிய குறிஞ்சிப் பாட்டுள் "நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென" என்ற தொடருக்கு "நெடிய தேரையுடைய என்தந்தையின் கடத்தற்கரிய கடியகாவலைக் கடந்துசென்று யானும் என் தலைவனுமாகத் தேர்ந்து கொண்ட களவு மணம் இது" என்பதுதான் உரிய பொருள்.

இதற்கு நச்சினர்க்கினியர் "பெருமையும், உரனும், அச்சமும், நாணமும்நுணுகிய நிலையாற்பிறந்த காந்தருவ மணம்" என்று கூறுகிறார்.

தமிழ்த்திருமகன் திரு, பொ. வே. சோமசுந்தரனர்அவர்கள் இத்தொடருக்கு "யாம் நுங்காதலும் எம்மடனும் ஒருங்கே அகலக் காவல் கடந்து சென்று நம்மையன்றி யாமே தேர்ந்துகொண்ட களவு மணமாம்" என்று உரை வகுக்கிறார்.

மன்றல் என்பதற்கு களவை விடுத்துக் காந்தருவத்தைக்கூறி வடவர் செறிக்கு உயர்வுதேட வந்த இந்த நச்சினர்க்கினியர் நம்மவர்க்கு நஞ்சா? அமிழ்தா?

தமிழ்நெறிநின்று தமிழ்நூலுக்கு உரைவகுத்தாலல்லவா அமிழ்தெனச் சுவைக்கும். தமிழ்நூலுக்கு வடநெறி நின்று உரையெழுதினல் அதுநஞ்சாகுமா? அமிழ்தாகுமா?

நடுவூருள் நச்சு மரம் பழுத்ததுபோன்று செந்தமிழ் மொழி என்னும் ஊரின்கண், நச்சினர்க்கினியர் என்னும் நச்சு மரம் முளைத்துக் கிளைத்து மூண்டெழுந்து வானுற ஓங்கி வளர்ந்து நிற்கிறது. "இளைதாக முள்மரம் கொல்க" என்ற வள்ளுவரின் வாய்மொழியை ஓம்பாததின் விளைவு இது. எனவே நச்சு மரத்தை வெட்டி வண்டிக்கு அச்சு மரமாக ஆக்குவோம்; அன்றி ஆழக் குழிதோண்டிப் புதைப்போம்.

குயில்

Regd. No. M. 7030.

கொட்டடா பறை!

இசை: மோகனம். தாளம்: ஆதி.

நற்றவம் பலித்ததே ஒற்றுமை பெற்றோம்
அற்றதே பகைஎன்று கொட்டடா பறை
உற்றதே விடுதலை கொட்டடா பறை!

அற்றைநாள் இப்பெருந் தமிழுலகம் ஆண்டோம்
இற்றைக்கும் நாம்அந்த நிலையினைப் பூண்டோம்
வெற்றி முற்றுமே பெற்றோம்நாம் தமிழர்
வியப்பில்லை என்று கொட்டடா பறை!
புகழ்க்கெல்லை இல்லை கொட்டடா பறை!

நாம்பெற்ற விடுதலை மணிக்கொடி காப்போம்
நானிலம் காப்போம் கெடுதலைத் தீர்ப்போம்
தேம்பலா வாழை மாவெனும் முத்தமிழ்ச்
செழுங்கனி வழங்குவோம் கொட்டடா பறை
முழுதுல கும்பெறக் கொட்டடா பறை!

ஒருவன் நாட்டை ஒருவன் பறிக்கும்
உள்ளப் போக்கைத் தமிழன்கை நறுக்கும்
அருள்ஒன்றே சட்டம்! மக்கட்கே ஆட்சி!
அமைதி நிலைஎன்று கொட்டடா பறை!
தமிழர் கொடைஎன்று கொட்டடா பறை!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.